RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22240

OPEN ACCESS

# கபிலர் பாடல்களில் முருகும் முருகு வழிபாடும்

ச. காளிமுத்து [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம். சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Murugan and its Worship in Kapilar songs

S. Kalimuthu [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: skmuthu29@gmail.com

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Kapilar sang most of the songs in Ettuthogai and Pathupaatu of Sangam literature. He was also called 'Kurinjikor Kapilar'. Out of that 235 songs were sung by Kapilar. Of these 38 songs are about the external subjects and the remaining 197 songs are about internal subjects. Out of this 197 1 songs belong to Paalai land, 3 to Neythal land, 1 to Mullai land and 1 to Marutham land. The remaining 191 songs belong to Kurinji land. There are others who have sung a verse in such detail. Since Kapilar has sung many Kurinchi songs, the aim of this article is to study the Kurinji land god Murugan and its worship.

**Keywords:** Kapilar, Worship, Marutham Land, Kurinji, Murugan

## முன்னுரை

சங்க இலக்கியமான எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் அதிக பாடல்களைப் பாடியவர் கபிலர். 'குறிஞ்சிக்கோர் கபிலர்' என்ற சிறப்பையும் பெற்றவர். இவர் படியதாகக் கூறப்படும் 235 பாடல்களிலும் குறிஞ்சித் திணைப் பாடல்களே அதிகம் என்பதை “இவற்றுள் 38(புறநா.+பதிற்.) பாடல்கள் புறப்பொருள் பற்றியன. எஞ்சிய 197 பாடல்கள் அகப்பொருள் பற்றியன. இந்த 197-இல் பாலைத்திணை-1 (அகநானூறு-203), நெய்தல் திணை-3 (குறுந் 246, நற்.267, 291) முல்லைத் திணை-1 (நற்.59), மருதத் திணை-1(நற்.320) ஆக ஆறுபோக எஞ்சியுள்ள 191 பாடல்கள் குறிஞ்சித் திணைக்கே உரியன. ஒரு திணையை இத்துணை விரிவாகப் பாடியவர் பிறர் இலர்” என்று ம.ரா.போ. குருசாமியன் கூறுவதிலிருந்தும் அறியலாம்.

கபிலர் குறிஞ்சித்திணைப் பாடல்களை அதிகம் பாடியுள்ளதால், குறிஞ்சி நிலக்கடவுளான முருகு பற்றியும் முருகு வழிபாடு பற்றியும் கபிலர் பாடல்களின் மூலம் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியம் சுட்டும் நிலம் சார்ந்த தெய்வம்

தமிழின் முதல்இலக்கண நூலானதொல்காப்பியம்

“தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ” (Ilampooranar, 2018)

என்று கருப்பொருளைச் சுட்டும்போது 'தெய்வம்' என்று பொதுப் பெயராகச் சுட்டுகிறது, ஆனால் இதற்கு முன்னர் நூற்பாவில் முதற்பொருள்களுள் ஒன்றான நிலத்தைக் குறிப்பிடும் பொழுது

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்" (Ilampooranar, 2018)

'சேயோன்' என்றே குறிப்பிடுகிறது. உரையாசிரியரான இளம்பூரணர் "சேயோன் மேய மைவரை உலகமும் என்பதற்கு முருகவேள் மேவியமைவரை உலகமும்" என்று 'முருகவேள்' என்ற பெயரை சேயோன் என்பதற்குப் பொருளாகக் கூறுகிறார்.முருகு, முருகன் என்ற இரண்டும் அல்லாமல் முருகவேள் என்றபெயர் நீட்சியை இவரின் உரையிலிருந்து காணலாம்.

மேலும் சேயோன் என்பதற்கு"சேயோன், சிவந்தவன், சேந்தன் என்னும் பெயரும் அப்பொருளதே. முருகன், வேலன் குமரன் என்னும் பெயர்களும் இவனுக்குண்டு" (Subramaniyan, 1986) எனும் கூற்றிலிருந்துமேயோன் சிவந்த நிறம்கொண்ட முருகன் என்பதை உணரலாம். மேலும் "சேயோன் என்பது சிவனையும் குறிப்பிடும் உலக வழக்கம்" என்று தேவநேயப்பாவணர் குறிப்பிடுகிறார் (Devaneya Pavanar, 2011).

"முருகு என்ற சொல் "முர்-முரு-முருக என வந்து முருகு என்பதற்கு வளைந்த காதணி" என்ற பொருளையும் தேவயேப்பாவணர் குறிப்பிடுகிறார். முருகன் வளைந்த காதணியுடன் பிற்காலத்தில் காட்சியளிப்பது கவனிக்கத்தகது(Devaneya Pavanar, 2011).

## சங்க இலக்கியத்தில் முருகு- முருகன்

சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நிலக் கடவுளாக முருகு காட்டப்பட்டுள்ளது. இவை முருகு, முருகன், முருக எனக் காட்டப்பட்டாலும் "முருகு" என்ற சொல்லே ((முருகு(29)(திரு.244; மது.38,181,611,724; பட்37;நற்:34-11,47-10,82-4,225-1, குறுந்.362-1; ஐங்.245-3; 247-3; 249-2; 308-4; பதி.26-12; பரி. 8-65,21-51; அகம்.22-1, 28-6, 118-5, 137-8, 138-10, 181-6, 232-14, 272-13, 288-4; புறம். 56-14,259-5) (Mathayan, 2007) 29 இடங்களில் வருவதைப் பெ. மாதையன் குறிப்பிட்டுள்ளார். மேலும் 'முருக' என்ற சொல் இரண்டு இடங்களிலும் "((முருக (2) திரு. 269; பரி. 5-50;) (Mathayan, 2007) 'முருகன்' என்ற சொல் ஒன்பதுஇடங்களிலும் ((முருகன் (9) பொரு.131; பரி. 8-81; அகம்.1-3; 59-11;98-10, 158-16; புறம்.16-12, 23-4,299-6)" (Mathayan, 2007) வருவதை பெ. மாதையன் குறிப்பிடுவதிலிருந்து, முருக, முருகன் என்பதைக் காட்டிலும் முருகு என்றே குறிஞ்சி நில மக்களால் வழங்கப்பட்டிருக்கலாம் என்பதை உணரமுடிகிறது.

## முருகும் வழிபாடும்

முருகு குறிஞ்சி நில மக்களின் தெய்வமாகக் காட்டப்பட்டாலும் வழிபடும் சூழல் கவனிக்கத்தக்கது. தலைவன் மீது காதல் கொண்ட தலைவியானவள் இயல்பிலிருந்து மாறிக் காணப்படுகிறாள் இதனை அறியமாட்டாத செவிலித்தாய்,"

"தாமரைக் கண்ணியை தண்நறுஞ் சாந்தினை

நேர் இழைக் கோதையாள் செய்குறி நீ வரின்

மணம் கமழ் நாற்றத்த மலை நின்று பலி பெறூஉம்

அணங்கு என அஞ்சுவர்" (கலித் குறிஞ்சிக்கலி-16)

இது மலையில்உறையும் அணங்கால் வந்தது என்றும் அதற்கு பலியிட வேண்டும் எனவும் அஞ்சுகிறாள்.

மேலும் தலைவியின் இந்நிலையால் பிறர் செய்யும் செயல் தோழிக்கு நகைப்பை உண்டாக்குகின்றன என்பதை

"பெய்ம்மணல் முற்றம் கவின்பெற இயற்றி

மலைவான் கொண்ட சினைஇய வேலன்

கழங்கினால் அறிகுவது என்றால்

நன்றால் அம்ம, நின்ற இவள் நலனே" (ஐங்குறுநூறு.248)

என்ற ஐங்குறுநூற்றின் பாடல் வழி அறியலாம்.மேலும், வேலன் என்பவன் கழங்கின் மூலம் இதை அறிகிறான். வேலன் என்பவன் சடங்கு நிகழ்த்துபவனாகவே காட்டப்படுகிறான் என்பதை,"குறிஞ்சி நில வேடர்கள் முருகனை மலைவாழ் கடவுளாகப் போற்றினர். முருகனைப் போலவே வேல்கொண்டு திரிந்த வேலன் என்னும் பூசாரி முருகன் வழிபாட்டை நடத்துபவன்" (சுப்ரமண்யன்,1986) என்று ந.சுப்பிரமண்யன் கூறுவதிலிருந்து உணராலாம்.

ஐங்குறுநூறிலுள்ள வெறிபத்து முழுவதும்தலைவியின் மாற்றத்திற்கு முருகே காரணம் என்பதை

"முருகு என மொழியும் வேலன்"(ஐங்.249;)

"மணிவரைக் கட்சி மடமயில் ஆலும் நம்.

மலந்தவள்ளி அம் கானங் கிழவோன்" (ஐங்-250)

"கன்னம் தூக்கி முருகுஎன மொழியுமாயின்" (ஐங்.247)

வேலன் குறிசொல்கிறான். இத்தகைய முருகு உறையும் இடமாகவும் முருகுக்கு உரிய சடங்காகவும் ஐங்குறுநூறு பாடல் ஒன்றில்

"குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர்சில கொண்டு

மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி

தேம்பலிச் செய்த ஈர்நறுங்கையள்"

எனக் கபிலர் குறுப்பிடுகிறார். இவற்றில் வேங்கைமலர் தூவப்பட்டு தேன் சொரிந்து வழிபட்டதையும் அறியலாம்.

தலைவியின் மயக்கம் தீர வெறியாட்டு நிகழ்ந்த வேண்டும் எனக் கூறுகிறான். வெறியாட்டு என்பது, குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின் நடனமாக இருக்கலாம். "நடனம் யதார்த்தின் மீதான அவர்களது அகநிலை ரீதியான அணுகுமுறையை மாற்றுவதன்மூலம் யதார்தத்தையும் மாற்ற மறைமுகமாக உதவுகிறது" என்ற ஜார்ஜ் தாம்சனின் கூற்றிலிருந்து மக்களின் நலம்பேணும் ஆடலாக வெறியாட்டை கருதலாம் (George Thomson, 2014).

இவ்வறான நடனம்,முருகுக்குத் தேன்சொரியும் வேங்கை மலரைச்சூடிக்கெண்டு, தொண்டகப் பறையை இசைத்துக்கொண்டும் வெறியாடியதை,

"தேன்கமழ் இணரவேங்கை சூடி

தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ"(அகம்.118)

என்பதின் மூலம் அறியலாம். மேலும் அகநானூறு382-ஆம் பாடலில்

"கடம்புகொடி யாத்து கண்ணி சூட்டி

வேறுபல் குரல ஒரு தூக்கு இன்இயம்

காடுகெழு நெடு வேள்.........."(அகம் 382)

கடம்புகொடி அணிந்தும் கண்ணி சூட்டியும் தூக்கு என்ற இசைக் கருவி இசைத்தும் முருகுக்கு வழிபாடு நிகழ்த்தியது சுட்டப்பட்டுள்ளது. இவற்றில் வழிபாட்டிற்குரிய பொருளாக அந்த குலம்சார்ந்த பொருளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் முருகு வழிபாடு குறித்து 15 சுப்பிரமண்யன் கூறும்

கருத்தும்ஒப்புநோக்கத்தக்கது, “முருகன் உருவத்தை நிறுவதற்கு வேங்கையின் நிழல் உகந்ததாகக் கருதப்பட்டது, அவனது அடியவர்கள் தொண்டகம் கொட்டி, கொம்பு ஊதி, மணியடித்து பூவைச் சுற்றிலும் தூவி வழிபட்டனர்.அவ்விடத்தில் நறும்புகை சூழ்ந்து கமழ்ந்தது. இவ்வடியார்கள் காலில் (காப்பு) கழல் அணிந்தனர். ஒவ்வோரமயங்களில் மகளிரும் வெறியாடினர்” (சுப்ரமண்யன்,1986) எனக் கூறுகிறார். இவற்றில் பெண்களும்வெறியாடினர் என்பது ஆராயத்தக்கது.

## முருகும் பலியிடலும்

தலைவியின் மயக்கத்திற்கு முருகே காரணம் என அறியாமல் வேலன் கழங்கினால் குறி சொல்கிறான் தலைவியின் மயக்கம் தீர முருகுக்கு வெறியாடி உயிர் பலி கொடுக்கப்படுகிறது. அவ்வாறு உயிர்பலிக் கொடுக்கும் ஆட்டுக்குட்டியின்இளநிலையை

“மென்முறிச்

சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ

மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி

ஏதில்வேலன் கோதை துயல் வரத்” (அகம். 292)

இளமையான தழையை அருந்தும் இளம்குட்டி என்று சுட்டப்பட்டுள்ளது. முருகு வழிபாட்டில் உயிர்பலி என்பது கவனிக்கத்தக்கது.முருகு என்பது சிறுதெய்வமாக இருந்து பெருந்தெய்வமாக மாறியிருப்பதை திருமுருகாற்றுப்படையில் காணலாம்

“கொடுந்தொழில் வல்விற் கொலை இய கானவர்

நீடமை விளைந்த தேக்கட் டேறற்

குன்றகச் சிறு கிளையுடன் மகிழ்ந்து

தொண்டகச் சிறுபறைக் குரவை யர

விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடுநறுங்காற்

குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி” (திருமுருகாற்றுப்படை -குன்று தோராடல்)

இதில் கானவர்கள் மது அருந்திவிட்டு கூட்டத்துடன் தொண்டகப் பறையை இசைத்துக்கொண்டு குரவைக் கூத்தாடியுள்ளனர் என்ற செய்தியை அறியலாம். அப்போது அவர்கள் தலையில் கண்ணியை சூடியுள்ளனர். மேலும் திருமுருகாற்றுப்படையில் மலர்தூவி மறிஅறுத்த செய்தியை,

“சிறுதினை மலரொடு விரைஇ மறியத்து

வாரணக் கொடியோடுவயிற்பட நிறிஇ

யூரூர் கொண்ட சீர்கெழு விழவினது

மார்வல ரேத்த மேவரு நிலையினும்” (திரு முருகாற்றுப்படை 218-221)

என்பதிலிருந்து அறியலாம்.

## முருகு பெருந்தெய்வமாக மாற்றம் பெறுதல்

கபிலர் பாடல்களிலே குறிஞ்சி நில மக்களின் நம்பிக்கை தெய்வமாக இருந்த 'முருகு' என்ற சிறுதெய்வம் பெருந்தெய்வமாகக் காட்டப்படுவது நிகழ்த்திருக்கிறது. கபிலரே சில பாடல்களில் ‘கடவுள்’ என்ற சொல்லையும் கையாண்டுள்ளார். தோழி தலைவனுக்கு அல்லக்குறியாக கூறும் கூற்றாக அமைந்த பாடலில்

“அருஞ்செலவு ஆரிடை அருளிவந்து அளிபெறாஅள்

மாறினென் எனக்கூறி மணம்கொள்ளும் தான் என்ப

நிலைஉயர் கடவுட்குக் கடம்பூண்டு தன் மாட்டு" (கலித்தொகை- குறிஞ்சிக்கலி. 10)

நிலை உயர் கடவுள் என்று முருகனை பெருந்தெய்வமாக உயர் த்துவதைப் பார்க்கலாம். கபிலர், சிவனின் மலையின் அடியில் இராவணனின் கை மாட்டிக் கொண்ட புராண நிகழ்வை

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்

உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக

ஐஇரு தலையின் அரக்கர் கோமான்

தொடிப் பொலி தடக்கையின் கீழ்புகுந்து அம்மலை

எடுக்கல் செல்லாது உழப்பவன் போல" (கலித்தொகை -குறிஞ்சிக்கலி. 2)

என உவமையாகக் கூறுவதிலிருந்தும் இக்கருத்து உறுதி படுத்துகிறது. கபிலர் பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் சேர மன்னரைப் புகழ்ந்து பாடும்போது கடவுள் என்றே குறிப்பிடுகிறார்.

"காமர் கடவுளும் ஆளும் கற்பின்

சேண் நாறு நறுநுதல் சேயிழை கணவ! (பதிற்றுப்பத்து -65)

இப்பாடலில் அருந்ததியைவென்ற கற்பு என்பதை 'காமர் கடவுள்'என்று கூறப்பட்டுள்ளது. மேலும் சேரமன்னர்களின் பனம் பூவைச் சூட்டும் போது

"தாந் புரிந்தன்ன வாளுடை விழவின்

போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த

கடவுள் வாகைத் தூய் வீ ஏய்ப்ப

பூத்த முல்லைப் புதல்சூழ் பறவை"(பதிற்றுப்பத்து -66)

வாளேந்தி போரிடும் மள்ளர்கள் சூடிய பனம்பூ என்பதில் 'கடவுள் என்று குறிப்பிடுவதையும் அறியலாம். கடவுள் வழிபாட்டில் வேள்விகள் நிகழ்த்தப்பட்டதையும்

"தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற

வேள்வியில் கடவுள் அருத்திணை; கேள்வி

உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்திணை

வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை"' (பதிற்றுப்பத்து-70)

என்ற பாடலில் அறியலாம். மேலும் கபிலர் உயர்நிலை உலகத்தில் வாழ்வதாகக் கூறப்படும் தேவர்களையும் குறிப்பிடுகிறார் என எண்ணத்தோன்றுகிறது. இவற்றில் உயர்நிலை உலகம் என்பது ஆராயத்தக்கது.

மேற்கண்டவற்றிலிருந்து முருகு-கடவுளர்-மன்னன்-கோ-இறை என மாற்றம் பெற்றிருப்பதாகக் கொள்ளலாம். இவற்றை "ஒரு குழுவிற்கு இயல்பாக உருவான தலைவனே இறை எனப்படுவான். இத்தொடரே பின்னாளில் கடவுளாகக் குறிப்பதற்கும், ஆளுவோருக்குக் குடிமக்கள் வழங்கிய திறையைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது." (Sivathambi, 2011).

## முடிவுரை

குறிஞ்சி நில மக்களின் வழிபடும் தெய்வமாகவும் தீர்வு தரும் தெய்வமாகவும் முருகு இருந்துள்ளது. இத்தெய்வத்திற்கு வெறியாட்டும் குரவை ஆட்டமும் நிகழ்த்தப்பட்டுள்ளன. வேலன் என்பவன் குறி சொல்லுபவனாகவும் முருகுக்குரிய சடங்கு நிகழ்த்துபவனாகவும் இருந்துள்ளான். இளம்

ஆட்டுக்குட்டியை முருகுக்குப் பலியிட்டுள்ளனர். முருகு கடவுளாக (பெருந்தெய்வமாக) மாற்றும் முயற்சி சங்ககாலத்திலேயே நிகழ்ந்துள்ளது. கபிலர் பாடல்களில் காணலாகும் முருகும் வழிபாடும் திருமுருகாற்றுப்படையில் காட்டப்படும் முருகனும் வழிபாடும் ஒப்பாய்விற்குரியன.

## References

Devaneya Pavanar, (2011) Pandai Tamil Nagaregamum Panpadum, Senbaga Pathippagam, Chennai, India

George Thomson, (2014) Manitha Saram, New Century Book House, Chennai, India

Ilampooranar, (2018) Tholkappiyam Poorulathikaram, Saratha Publication, Chennai, India

Mathayan, P. (2007) Sanga Ilakiyach Solladaivu, Tamil University Publication, Thanjavur, India

Sivathambi, K. (2011) Pandai Tamil Samugam, New Century Book House, Chennai, India

Subramaniyan, N. (1986) Sangakala Valviyal, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License